சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.10.08.2023

OS.NO.63/2019

PW1: திரு. சுந்தரம் (வயது 63) த/பெ. பொன்னுசாமி

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் தாத்தா பெயர் என்ன என்றால் சுந்தரம்பிள்ளை. எனது அப்பா பெயர் பொன்னுசாமி பிள்ளை. குடும்பத்தில் பாகம் ஏற்பட்டது என்றால் 05.08.1988ல் பாகம் ஏற்பட்டது. அந்த பாகப்பத்திரத்தை வழக்கில் போட்டுள்ளீர்களா என்றால் போட்டுள்ளேன். அந்த பாகப்பத்திரத்தின் தாவா சொத்து பி செட்டியூல் 3வது அயிட்டமாக வருகிறது என்றால் சரிதான். 1958ல் தாவா சொத்திற்கு பட்டா எண். 154 என கொடுத்தார்கள். அதற்கு பிறகு பட்டா எண் எப்போது மாறியது என்றால் 1975ல் எனது தாயார் வள்ளியம்மை பேரில் பட்டா மாறியது. அந்த பட்டா எண். 145. மேற்படி பாக பத்திரத்தில் தாவா சொத்து சுந்தரத்திற்கு ஒதுக்கப்பட்டது. வள்ளியம்மைஎப்போது இறந்தார் என்ற தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. நான் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு சிட்டா அடங்கல் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் சிட்டா அடங்கல் ஏ ரிஜிஸ்டர் வள்ளியம்மை பேரில் உள்ளதை தாக்கல் செய்துள்ளேன். எங்கள் ஊரில் சுந்தரம் பிள்ளை என்ற பெயரில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதியின் தாத்தா பெயர் என்ன என்றால் சங்கரம்பிள்ளை. 1ம் பிரதிவாதியின் அப்பா பெயர் ராஜமாணிக்கம். சா. பொன்னுசாமி பெயருக்கு பட்டா மாறியது எப்போது தெரியவந்தது என்றால் 2004ல் தெரியவந்தது. சாட்சி தற்போது 2018ல் தெரியவந்ததாக கூறுகிறார். மேம்பாட்டு திட்டத்தில் அந்த பட்டா மாறவில்லை என்றால் சரிதான். சாட்சி தற்போது மேம்பாட்டு திட்டத்தில் தனது பட்டா

மாறியதாக கூறுகிறார். தனிப்பட்ட முறையில் 1ம் பிரதிவாதி விஏஓ மூலமாக பட்டா மாற்றி உள்ளார். அது விஏஓ மூலமாக தனிப்பட்ட முறையில் பட்டா மாற்றியது பொருத்து தாசில்தாரிடம் புகார் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். என்றைக்கு புகார் கொடுத்தீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. ஆனால் விசாரணை நடந்தது. என்றைக்கு விசாரணை நடந்தது என்றால் 4 நாட்களில் எனக்கும் முருகேசனுக்கும் லெட்டர் வந்தது. அந்த லெட்டரை கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளேன். முருகேசனிடம் தாசில்தார் சுந்தரத்திற்கு எப்படி பட்டா மாறியது என்பதை காட்டுமாறு சொன்னார். அதன் படி முருகேசன் ரிக்காட்டை காட்டினாரா என்றால் காட்டவில்லை. முருகேசன் கேவியட் போட்டு நோட்டீஸ் அனுப்பினார் என்றால் சரிதான். எனக்கு அந்த கேவியட் மனு மற்றும் நோட்டீஸ் காப்பி கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். பட்டா என்னால் மாற்ற இயலாது என்று சொல்லி தாசில்தார் உத்தரவு போட்டாரா என்றால் உத்தரவு போட்டார். அதன் மேல் ஆர்டிஓ விடம் மேல் முறையீடு போனீர்களா என்றால் போகவில்லை. எனக்கு படிக்க தெரியாது என்பதால் நான் மேல் முறையீடு போகவில்லை.

(வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது).

*signed*
சுந்தரம்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

*signed*
சார்பு நீதிபதி
இலால்குடி